1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கரும்பு கிடைப்பதுதான் முக்கியமாக பரிசீலிக்கப்படுகிறது. அந்தக் குறிப்புகள்தான் இப்போது பெறப்பட்டு வருகின்றன.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்ட மாதிரி அந்த இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடம். 2,500 டன் 'கிரஷிங் கபாசிடி' இருக்கவேண்டுமென்றால் 15,000 ஏக்கர் தேவை. எங்கள் பகுதியில் 11 மாதம் தண்ணீர் பாயும். 15,000 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. எல்.பி.பி. பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1 லட்சம் ஏக்கர் இருக்கிறது. பி.ஏ.பி. பொறுத்தவரையில் 30,000 ஏக்கர் இருக்கிறது. 250 நாட்களுக்கு மேல் சப்ளை செய்கிற அளவுக்கு தண்ணீர் வசதி இருக்கிறது. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைப்படி, அந்தத் தகுதிகள் எதுவுமே இல்லாத இடமான கோவையில் நீங்கள் ஆரம்பிப்பதாக இருக்கிறீர்களே, அதை கொடுமுடிக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த முடிவு நாங்கள் எடுக்கவில்லை, நாமும் எடுக்கவில்லை. 1967-க்கு முன்னாலே அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது. அப்படியிருக்கும்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்ன கருத்து, நாம் பரிசீலிக்கும் அந்தக் கருத்துக்கள் எல்லாம் ஏ. எம். இராஜா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. கே. ரங்கநாதன்: தலைவரவர்களே, சர்க்கரை ஆலை ஏற்கனவே கோவை மாவட்டத்தில் நிறுவ ஆரம்ப வேலைகள் நடைபெற்று நின்று விட்டது. எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அந்தப் பகுதியில் பணம் கொடுப்பதிலே காலதாமதம் ஆனது. அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். தண்ணீர் கிடைக்காத நிலை அந்த இடத்தில் இருந்தது. ஓரளவிற்குத் தட்டுப்பாடு அகற்றப்பட்டிருக்கிறது.

Production of Nitric Acid

*812 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any project in (i) public and (ii) private sector has been set up in Ambattur for the production of Nitric Acid; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொற்கை பஞ்சாயத்தையும் தாழஞ்சேரி பஞ்சாயத்தையும் இணைக்கின்ற அய்யாவையனுற்றுப் பாலம் கட்டுவதற்கு 1971-ம் ஆண்டு திட்டம் தயாரிக்கப் பட்டு, 2—3—1972-ல் அது ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்பட்டது. ஒப்பந்தக் காரர்கள் அந்த உடன்படிக்கையின்படி செயல்படவில்லை. இதற்கிடையில் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ்-ன் கீழ் இந்த வேலையை எடுத்துக்கொள்ளலாம் என்று யோசித்து முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், மத்திய அரசு இந்தப் பால வேலையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டதன் காரணமாக, அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது அவசியம் என்று கருதியதினால் மாயூரம் ஊராட்சி ஒன்றியமே இந்த வேலையை மீண்டும் எடுத்துச் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான திருத்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆய்வாளர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி அலுவலரும் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சென்னை-கம்பம் விரைவுப்பேருந்து

* 834 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே துரித பஸ் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் சென்னையிலிருந்து திண்டுக்கல் செல்லவேண்டும் என்றால் பஸ்கள் அதிகமாக இல்லை. சென்னையிலிருந்து மதுரை நகரத்திற்குச் செல்லக்கூடிய பஸ்களெல்லாம் திருச்சி மேலூர் வழியாக செல்லுகின்ற காரணத்தினால் சென்னையிலிருந்து திண்டுக்கல் கம்பத்திற்கு ஒரு பஸ் விட்டால் ஏதுவாக இருக்குமே? அதற்கு ஏற்பாடு செய்வார்களா?